செ.வெ.எண் : 01/பிப்ரவரி நாள் : 01.09.2019.

## இராமநாதபுரம் மாவட்டம்

## ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தொகுதி-IV (GROUP-IV) போட்டித் தேர்வை 27,621 நபர்கள் எழுதியுள்ளனர்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மற்றும் பரமக்குடி ஆகிய ஊர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.09.2019) நேரடியாகச் சென்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி-IV (TNPSC-COMBINED CIVIL SERVICES EXAM GROUP-IV) தேர்வு நடைபெறும் தேர்வு மையங்களை ஆய்வு செய்தார்.

குறிப்பாக, இராமநாதபுரம் புனித ஆண்ட்ரூஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி அரசு கலைக் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் அமைக்கப்பட்டிருந்த தேர்வறைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாகச் சென்று தேர்வு நடவடிக்கைகளை ஆய்வு செய்தார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்றைய தினம், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் நிலை 1, நிலஅளவர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் உள்ளிட்ட பல்வேறு அரசுப் பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் தேர்வு செய்வதற்காக ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தொகுதி IV (Group IV) தேர்வு நடைபெறுகிறது. இத்தேர்வினை அமைதியான முறையில் நடத்திட ஏதுவாக மொத்தம் 107 இடங்களில் உள்ள 128 தேர்வு அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் இத்தேர்வில் கலந்து கொள்வதற்காக விண்ணப்பித்த 32,896 நபர்களுக்கு தேர்வுக்கான நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. அதில் 27,621 (84 சதவிதம்) நபர்கள் மட்டுமே தேர்வு எழுதியுள்ளனர். மீதமுள்ள 5,275 நபர்கள் தேர்வு எழுதவில்லை.

தேர்வின் போது முறைகேடுகள் ஏதும் நடக்காமல் தடுத்திடும் வகையில் துணை ஆட்சியர் நிலை அலுவலர்கள் தலைமையில் 10 பறக்கும் படை குழுக்களும் (Flying Squad) வட்டாட்சியர்/துணை வட்டாட்சியர் நிலை அலுவலர்கள் தலைமையில் 27 நகர்வுக் குழுக்களும் (Mobile Squad) அமைக்கப்பட்டு தேர்வு கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன. தேர்வு மையங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒளிப்பதிவு செய்திட 128 வீடியோகிராபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் ஏறத்தாழ 2,000 ஆசிரியர்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் இத்தேர்வு பணியில் ஈடுபடுத்துப்பட்டுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் தேர்வறைகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வு எழுதும் நபர்கள் தேர்வறைகளுக்கு சிரமமின்றி செல்ல ஏதுவாக கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து தேர்வு மையங்களிலும் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தேர்வு முடிந்தவுடன் விடைத்தாள்களை மீண்டும் அந்தந்த தேர்வு மையங்களில் இருந்து இராமநாதபுரம் மாவட்ட கருவூலம் மற்றும் அனைத்து சார்நிலை கருவூலங்களுக்கு பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இத்தேர்வானது அமைதியான முறையில் நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, வருவாய் வட்டாட்சியர்கள் திருமதி.தமிழ்ச்செல்வி (இராமநாதபுரம்), திரு.சரவணன் (பரமக்குடி) ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**